2013 மே 9]

நிர்ணயிக்கப்பட்ட எந்த ஒரு அளவுகோலையும் நிறைவு செய்யாத காரணத்தினால் புதிய நல்லூர் வருவாய்க் கோட்டம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 453, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

453—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***525—திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், எலந்தக்கூடம் மற்றும் குருவாடியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், எலந்தக்கூடம் அரசு உயர்நிலைப் பள்ளியானது அரசாணை (நிலை) எண் 120, பள்ளிக் கல்வி (மேநிக2) துறை, நாள் 8-8-2011-ன்படி 2011-2012 ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மற்றொரு பள்ளி தரமுயர்த்தப்படுவதற்குத் தேவையான பொதுமக்களுடைய பங்குத் தொகை 2 இலட்ச ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது. போதிய இடவசதியும் உள்ளது. ஆகவே, தேவை மற்றும் நிதிநிலையைக்

கருத்தில்கொண்டு இவ்வாண்டு அதனை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்கிற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.*

திரு. துரை. மணிவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பனும் பாரதியும் காண விழைந்திட்டக் காவியமே, கழகத்தின் உயிர் ஓவியமே, "அவனின்றி ஓர் அணுவும் அசையாது;" என்பது அறிந்த மொழி. அம்மா அவர்களின் அரும் செயலின்றி தமிழினம் தலை நிமிராது; இது உணர்ந்த மொழி. அம்மா அவர்களின் அரும் செயலின்றி இல்லாமை, கல்லாமை, ஏழ்மை, இயலாமை, வறுமை, ஒழியாது; இது உணர்ந்த மொழி. தமிழகமே, தமக்கு உறவு, தமிழகமே தனக்கு வேலி எனும் தவம் கொண்ட துறவரத்தால், தூய உள்ளத்தால், தொண்டு மனத்தால், தாய்மையின் உறைவிடமாய், தமிழகத்தின் வரைபடமாய் வாழும் என் தாயின் திருவடி வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அரியலூர் மாவட்டம் கல்வி வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டம். அம்மா அவர்களிடம் கேள்வி எழுப்பிய நேரத்தில் இமையின் விழியைப்போல அரியலூர் மாவட்டம், அரியலூர் தொகுதி, எலந்தக்கூடம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக 2011-2012 ஆம் ஆண்டில் உத்தரவினை வழங்கிச் செயல்படுவதற்கு ஆணையிட்டும், அரியலூர் மாவட்டம், கோவிந்தபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தியும், 8 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியும் கொடுத்த வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களுக்கு மாணவச் செல்வங்கள் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும், கோடானுகோடி நன்றி மலர்களால் தங்கள் பாதம் பணிந்து வணங்கி, இந்த ஆண்டு குருவாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், காவனூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்பி அமர்கிறேன்.*

2013 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்று ஒரு கருத்தை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார். 'படிக்காதவர்கள் கற்றுக்கொள்ளுங்கள், படித்தவர்கள் பிறருக்கு கற்றுக்கொடுங்கள்' என்று சொன்னான், Fidel Castro. அதைப்போல Each one teach one என்ற பிரகடனத்தைத் தந்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கேட்டவுடன் மாத்திரமல்ல, கேட்காமலே கொடுக்கக்கூடிய ஒரு நல்லரசைக் கொண்டிருக்கிற, ஒரு மகத்தான முதலமைச்சரைக் கொண்டிருப்பதுதான் இந்தத் தமிழகம். அதனுடைய அடிப்படையிலேதான், விதி 110-லே ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று திட்டங்களைத் தந்து தமிழக மக்களைத் திக்குமுக்காடச் செய்திருக்கிறார்கள். ஒரே கல்லில் மூன்று மாங்காய் விழுந்திருக்கிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். இன்று மாங்காய் மாத்திரம் விழவில்லை, மாம்பழமே விழுந்திருக்கிறது என்பதுதான் ஒரு நல்ல செய்தி. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை உரிய முறையிலே விதிகளுக்குட்பட்டிருந்தால், அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்து, ஆய்வு செய்யப்படும் என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருவாடி அரசு உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு மக்களின் பங்களிப்புத் தொகையினை அரசுக்குச் செலுத்தி ஐந்தாண்டுகளுக்கு மேலாகிறது. அந்தப் பள்ளியினுடைய மாணவர்களின் எண்ணிக்கை 500-ஐத் தாண்டியிருக்கிறது. அருகில் 7 கி.மீ.-க்குள் மேல்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தால், மாணவர்களின் நிலைமையை உணர்ந்து--அதேபோல் காவனூர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், உடையார்பாளையம்

மேல்நிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், 22 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும். அரியலூருக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் 20 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும். கீழ்ப்புதூருக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால் 24 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும். இவ்வளவு தூரம் சென்று இன்றைய காலகட்டத்திலே மாணவச் செல்வங்கள் கல்வி பயில்வதற்கு சிரமமாக இருக்கின்றது. அந்தப் பகுதி 100-க்கும் மேற்பட்ட Mines-கள் உள்ள பகுதி என்பதால் சாலையிலே அதிக கனரக வாகனங்கள் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, மாணவர்களுடைய நலனைக் கருதி இந்த ஆண்டே காவனூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், குருவாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று தரம் உயர்த்தித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக வேண்டி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசு பல நெறிமுறைகளை வகுத்திருக்கிறது. ஏற்கெனவே, இதை நான் இந்த அவையில் பதிவு செய்திருக்கிறேன். இரண்டு இலட்சம் ரூபாய் பங்குத் தொகை செலுத்தி இருக்கவேண்டும். மகளிர் பள்ளிக்கு முன்னுரிமை, மலைவாழ் பகுதி மற்றும் ஆதி திராவிடர் மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதி, மாநகராட்சி என்று சொன்னால் 6 கிரவுண்ட் இடமும், நகராட்சி மற்றும் மாவட்டத்தினுடைய தலைமைப் பகுதியாக இருந்தால் 8 கிரவுண்ட் இடமும், மற்றும் இருக்கின்ற மையப் பகுதிகள், கிராம ஊரகப் பகுதிகள் . . .

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

2013 மே 9]

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *ஊரகப் பகுதியாக இருந்தால் 3 ஏக்கர் நிலம் வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள், நெறிமுறைகள் சொல்கின்றன. மேலும், ஒரு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டுமென்று சொன்னால், அப்பள்ளியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவுக்கு வேறு எந்த மேல்நிலைப் பள்ளியும் இருக்கக்கூடாது. அந்த உயர்நிலைப் பள்ளியில் 100 மாணவர்கள் கண்டிப்பாக படிக்கவேண்டும் என்றெல்லாம் அரசு நெறிமுறை வகுத்துள்ளது. இந்த நெறிமுறைகளுக்கு உட்பட்டிருந்தால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று உரிய முறையிலே பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 454, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

454—

24 மணி நேர மருத்துவமனை

***4272—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதி, போரூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் தொகுதி, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், போரூரில் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய